உ

# ஞானோதயம்

ஞானம் 01 தாரண ௵ ஆனி ௴ (02- 06- 2004) உதயம் 13



ஆனி 2004

அன்பளிப்பு: ரூபா 20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வாதத்தின் மூலம் சைவநெறியை நிலைநாட்டிய
# வாதவூரர்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மேலே கூறப்பட்ட மூவகை வடிவங்களுக்குள்ளும் பக்குவமுடைய உனக்குத் தீட்சை செய்து பெருங்கருணையினாலே சாத்திரதீட்சை செய்வது இக்குருவடிவமேயாகும். அருவுருவமாவது சகலரும் வணங்கத்தக்க எளிதாக வந்து வரங்களைக் கொடுக்கும் சிவலிங்க வடிவமேயாகும். அருவடிவமாவது பேரொளி நிருமலமாயிருக்கும். விருப்பத்தினோடும் எமக்கு ஏற்ற பத்திர புட்பங்களையுடைய விருட்சங்களை வளர்த்தலும் அம்மலர்களினாலே பூமாலைகளைத் தொடுத்துச் சாத்துதலும் எமது தோத்திரங்களைப் பாடுதலும், நாம் வீற்றிருக்கும் ஆலயங்களிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பிரகாசிக்கும்படி தீபம் ஏற்றுதல், அடியவர்களுக்குத் தொண்டு செய்தல் ஆகியவை சாலோகபதமாகும்.

தூப தீபங்களைக்கொண்டு திருமஞ்சனம் ஆட்டிப்பூசை செய்கின்றவர்கள் அக்கினிகாரியம் முதலியன செய்து கிரியா பாதத்தை அநுட்டிப்போருக்கு எமது சமீபத்தில் இருத்தலாகிய சாமீபபதத்தைக் கொடுப்போம். முக்குணங்கள் ஐம்புலன்கள் ஆகியவற்றை அடக்கி சுழுமுனையாகிய நாடியைத்திறந்து பஞ்சாட்சரமும், ஏகாட்சரமும் ஆகிய தன்மைகளை ஞானக்கண்ணினால் தியானித்துத் தரிசித்தலாகிய தன்மையினாலே பூமியில் வேட்டுவன் என்னும் செந்து அதனால் எடுக்கப்பட்ட வேட்டை வாழியினது உருவத்தைப் பெறுந்தன்மையைப்போல் சாரூபத்தை அடைவர். பலதிறத்தனவாகிய சமய நூல்களையும் முப்பொருள்களையும் நிச்சயித்து சிவஞானந்தோன்றப்பெறும் சாதுரியர்களாகிய மூன்று முத்திகளுக்கும் மேலான பதவியைப் பெறுவர்.

வளரும்

# GOD - கடவுள்

| | | | |
|---|---|---|---|
| G | – | Generation | படைத்தல் |
| O | – | Organisation | காத்தல் |
| D | – | Destruction | அழித்தல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆனிமாத சிறப்புகழ்

ஆனிமாதம் மிதுன சங்கிராந்தி புண்ணியகாலமாகும்.

ஆனி உத்தரம் சிவாலயங்களில் அபிஷேக ஆராதனை யுடன் நிகழும்.

சிதம்பர நடராசப்பெருமானுக்கு ஒரு வருஷத்தில் ஆறு அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இங்கே மார்கழித்திருவாதிரை அன்று நடைபெறும் அபிஷேகம் மிகவும் சிறந்தது. ஏனெனில் மனிதர்களுக்கு ஒருவருஷமானது தேவர்களுக்கு ஒருநாள். அந்த ஒருநாளில் வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அர்த்த யாமம் என அறுவகைப்பொழுதுகள் உள்ளன.

தேவர்கள் நாளில் வைகறைக்குச் சமனானது (மார்கழி)
காலைச்சந்திக்குச்சமனானது (மாசி)
உச்சிக்காலத்திற்குச் சமனானது (சித்திரை)
மாலைக்காலத்திற்குச் சமனானது (ஆனி)
இரவுக் காலத்திற்கு சமனானது (ஆவணி)
அர்த்தயாமத்திற்கு சமனானது (புரட்டாதி)

ஆனிமாத உத்தர நக்ஷத்திரத்திலன்று நிகழும் தரிசன மாகையால் இத்தினம் ஆனி உத்தரம் எனவும், ஆனித்திருமஞ் சனம் என்றும் விஷேடநாளென்று சிவாலயங்களில் சிவபூஜை நிகழ்த்த வேண்டும். ஆறுகாலபூஜை அபிஷேகம், தூபதீபநைவேத் தியம் ஆராதனை செய்து ஸ்தோத்திர பாராயணம், தமிழ்வேதங் கள் ஆகிய நான்மறை வேதங்கள் முறைப்படி ஓதுதல் வேண் டும். நடராசப்பெருமானை ஆராதனை செய்து அறுவகைச் சுவை யான நைவேத்தியங்கள் தாமபூலாதி பழவர்க்கத்துடன் உபா சனை பண்ணி திருப்பொன்னூசலாடி எழுந்தருளச் செய்வோமே யானால் தில்லையம்பலத்தானுக்கு சேவிக்கின்ற பலன்கள் யாவும் புண்ணியப்பேறாக திருவருள் கிடைக்கின்றன.

தில்லையிலே நடராஜப்பெருமானுக்கு தினமும் ஆறுகால மும் அபிஷேக ஆராதனை பூஜைகள் நடைபெறுகின்றன. நட ராஜப்பெருமானுக்கும் சிவகாமியம்மையாருக்கும் மார்கழி, ஆனி மாத மஹோற்சவ புண்ணியகாலங்களில் ரதோற்சவத்தன்றும், மறுநாட் தரிசனத்தன்றுமே சிற்சபையிலே எழுந்தருளி பக்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

களை ரட்சித்து திருவருளினால் நல்லருள் புரிகிறார். புனிதமும் மகத்துவமும் பொருந்திய இப்புண்ணியநாளில் அம்மையப்பனை வணங்கி அருள்பெற்றுய்வோமாக.

திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமின் சிரிப்பும் பனித்த சடையும்
பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால் மனிதப்பிறவியும்
வேண்டுவதே இம்மாநிலத்தே

இந்தச்சரீரம் நமக்குக் கிடைத்தது. நாம் கடவுளை வணங்கி தொண்டுகள், பல பணிகள் புரிந்து முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம். இன்னகாலத்திலே இந்தச் சரீரம் எப்படி எப்பொழுது நீங்குமென்பது நமக்கு விளங்காமையால் – அறியவில்லை ஆதலால் நாம் எக்காலத்திலும் கடவுளை வணங்குதல் அவசியம் வேண்டும். முக்காலமும் இறைபணி செய்து வாழ்வோமாக முக்தியின்பமடைய பக்திசெய்வாய். (நின்றுமிருத்துங் கிடந்தும் நடந்தும் நினைவாய் என்றுஞ் சிவன்தாளினை)

சுபம்.

## நவக்கிரக க்ஷேத்திர ஸ்தலங்கள்:

1. சூரியன்:

கும்பகோணம், திருக்கண்டியூர் வட்டம், திருவையாறு, திருப்புறவார், பனங்காட்டூர், விழுப்புரம்.

2. சந்திரன்:

திங்களூர், திருவையாறு, திருப்பதி

3. செவ்வாய்:

திருச்சிறுகுடி, மாயாவரம், திருப்புள்ளிருக்குவேலூர், வைத்தீஸ்வரன் கோவில், பழநி.

4. புதன்:

திருவெண்காடு, மாயாவரம், திருவாலவாய், மதுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

5. வியாழன்:
தென்குடித்திட்டம், மாயாவரம், திருவலிதாயம், சென்னை, திருச்செந்தூர்.

6. வெள்ளி:
திருநாவலூர், பண்ருட்டி, ஸ்ரீரங்கம், சக்ரத்தாழ்வார், திருச்சி

7. சனி:
திருநள்ளாறு, காரைக்கால்

8. ராகு:
திருநாகேஸ்வரம், கும்பகோணம்

9. கேது:
திருக்காளத்தி

நவக்கிரகங்களின் விசேஷ ஸ்தலங்களாகும்.

திருவீச்சரம்
அதிபர் ஷர்மாஜி

---

# சைவ நாற்பாதங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## யோகம்:

சரியையில் புறத்தொழிலால் இறைவனின் உருவத்திரு மேனியை நோக்கியும், கிரியையில் அகத்தொழிலால் இறைவனின் அருவுருவத் திருமேனியை நோக்கியும் வழிபாடு செய்த சாதகன் இறைவனின் அருவுருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே யோகம் ஆகும். யோகம் என்றால் சேர்தல் என்பது பொருளாகும். எனவே உயிரானது இறைவனோடு சேர்தலே யோகம் எனப்படும். யோகத்தில் சாதகன் மனம் முதலிய அகக்கருவிகளைச் சிவனுக்கு அர்ப்பிதம் செய்கிறான். உயிரானது இறைவனோடு சேர்வதற்குரிய பக்குவம் பெறுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சாதகன் மேற்கொள்ளும் பயற்சியே அட்டாங்க யோகம் எனப் படும். இயமம் நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியா காரம், தாரணை, தியானம், சமாதி என்பன அட்டாங்க யோகம் ஆகும். சமாதி நிலையில் உடல் மரக்கட்டை போன்று உணர்வின்றி இருக்க மனமானது பொறிபுலன்களின் தடுமாற் றத்திலிருந்து விடுபட்டுச் சிவசோதியிலே கலந்திருக்கும். இதனைத் திருமந்திரம் பின்வருமாறு கூறுகின்றது.

நெறிவழி யேசென்று நேர்மையுள் ஒன்றித்
தறியிருந் தாற்போல் தம்மை யிருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே.

யோகத்தைச் சகமார்க்கம் எனவும் கூறுவர். சாதகன் இறைவனைத் தோழனாகப் பாவித்து அன்பு செய்யும் முறையே இதுவாகும். ஐம்பொறிகளையும் ஒடுக்குதல், சுவாசத்தை நிலை நிறுத்தல், மனத்தை ஒருமுகப்படுத்தல் உடம்பினுள் ஆறு ஆதா ரங்களையும் தரிசித்தல், உயிரை அவ்வாதாரங்களுக்கு மேலே செலுத்துதல் சிரத்தின் நடுவிலுள்ள சந்திரமண்டலத்திலிருந்து ஒழுகும் அமிர்ததாரையால் உடல் முழுவதையும் நிறைத்து நிலைத்திருக்கச் செய்தல், முழுச்சோதிவடிவான சிவப்பிரகாசத் தைக் கண்டு சமாதி கூடி ஆனந்தத்தில் அழுந்தியிருத்தல் என் பன யோகநெறியின் பாற்படும்.

அட்டாங்க யோகத்தில் இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்ற நான்குப் யோகத்திற் சரியை எனவும் பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்திற் கிரியை எனவும், தியானம் யோகத்தில் யோகம் எனவும், சமாதி யோகத்தில் ஞானம் எனவும் கொள்ளப்படும்.

இயமம்: அகிம்சை, சத்தியம், நேர்மை, இரக்கம், பரிவு, ஆன்மசுத்தி, பொறுமை, தைரியம், கடமையில் ஈடு பாடு, உடற்சித்தி.

நியமம்: தவம், மகிழ்ச்சி, இறைசிந்தனை, தானம், ஈசுவர பூசை, ஞானசாத்திரம் கேட்டல், பழிக்கஞ்சுதல், பக்தி, செபம், விரதம்.

ஆசனம்: யோகநிலையில் நிற்றற்கான ஆசனத்தை அமைத்துக் கொள்ளல் (அமரும் முறை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிராணாயாமம்: மூச்சை அடக்கி ஆளுதல்.

பிரத்தியாகாரம்: மனத்தைப் பிறவிடயங்களிலே செல்லாமற் தடுத்தல்.

தாரணை: மனத்தை ஒருமுகப்படுத்தல்

தியானம்: சிவபெருமானின் அருவத்திருமேனியைத் தியானித்தல்

சமாதி: தியானத்திலே நிலைபெறுதல்.

யோகநெறி நிற்போர் சாரூபமுக்தியைப் பெறுவர். சாரூபமாவது முற்கூறிய உலகங்களிலே மைந்தரிலும், சிறந்த தோழர்களாய், புவனபதிகளோடு ஒத்த உருவும், பெயரும் உடையவர்களாய் அளவளாவி இருக்கும் உரிமையைப் பெற்றிருத்தல் ஆகும்.

சமாதிநிலையில் தியானிப்போன் தியானம், தியானிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடு நீங்கிவிடும். தியானிப்போன் தியானிக்கப்படும் பொருள் என்ற வேறுபாடு நீங்கிவிடும். தியானிப்போன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுவான் என்பதை 'த்யானத் யாத்ரு நேயரூபா' என லலிதா சகஸ்ர நாமம் கூறுகின்றது.

யோகிகளின் உள்ளத்தில் முழு உலகும் அடங்கிவிடும். சமாதியிலே இறைவனது அருவத்திருமேனியைத் தியானிக்க அச்சிவம் சுடர்விடும் பேரொளிமயமாய் விளங்கும் என்பதை பின் வரும் திருமந்திரப்பாடல் விளக்குகின்றது.

யோகச் சமாதியின் உள்ளே யகலிடம்<br>
யோகச் சமாதியின் உள்ளே யுளரொளி<br>
யோகச் சமாதியின் உள்ளே யுளசக்தி<br>
யோகச் சமாதி யுகந்தவர் சித்தரே.

சமாதிநிலை கூடுபவன் அளப்பரிய சக்திகளைப் பெறுவான். அவையாவன:

அணிமா: அணுவளவாகச் சுருங்கும் ஆற்றல்.

லகிமா: கனமற்றதாகும் ஆற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகிமா: விரும்பியவாறு உருவத்தைப் பருக்கச் செய்யும் ஆற்றல்

பிராத்தி: வேண்டியவற்றை அடையும் ஆற்றல்

கரிமா: மிகக் கனமாயிருக்கும் ஆற்றல்

பிராகாமியம்: நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றல்.

ஈசத்துவம்: படைத்தல் போன்ற மேலான செயல் புரியும் ஆற்றல்.

வசித்துவம்: யாவரையும் யாவற்றையும் வசப்படுத்தும் ஆற்றல் இவற்றை அட்டமாசித்திகள் எனவும் கூறுவர்.

சமயகுரவர்களில் சுந்தரமூர்த்தி நாயனார் யோகநெறி நின்று இறைவன் அருள்பெற்றவர். இனி இதுவரை கூறிய சரியை கிரியை, யோகம் ஆகிய மூன்றும் சாதகனைப் படிப்படியாகப் பக்குவப்படுத்தி இறுதிச்சாதனமாகிய ஞானத்திற்கு இட்டுச் செல்வதைக் காண்போம்.

செல்வி. ப. உருத்திராதேவி

(தொடரும்)

## யோகர்சுவாமிகளின் நற்சிந்தனை

# கடவுளைக் காண்பீரோ?

தலையை நிலத்தில் நிறுத்திப் பார்த்தால் - இறைவனாவீரோ
காலை மேலே ஏற்றிப் பார்த்தால் கடவுளைக் காண்பீரோ.

மலைமேலேறி மவுனஞ் செய்தால் மகாதேவனைக் காண்பீரோ
சிலைபோ லிருந்து சிந்தித்துப் பார்த்தால் தேவனைக் காண்பீரோ

கலைகள் பலவும் கற்று விட்டால் கங்கா தரனைக் காண்பீரோ
விலைக்குப் புத்தகம் வேண்டிப் படித்தால் விமலனைக் காண்பீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாலைக் குடித்துப் பட்டினி கிடந்தால் பரமனைக் காண்பீரோ
வேலை செய்யாமல் வீதியில் திரிந்தால் வேந்தனைக் காண்பீரோ

மூலையில் இருந்து முணுமுணுத்தால் முதல்வனைக் காண்பீரோ
சாலப் பசிக்கு ஒருபோது புசித்தால் சாமியாவரோ.

## கணமேனுஞ் சும்மாவிருக்குங் கருத்திலார்

மனச்சாட்சி மனச்சாட்சி யென்று மருட்டினார்
தனதாட்சி செய்யத் தலைநி மிர்த்திலார்

பணமாட்சி வேணுமென்று பறை யறைகிறார்
கணமேனும் சும்மா விருக்கும் கருத்திலார்.

மனமாட்சி வேணுமென்று மனம் பதைக்கிறார்
குணமாட்சி யில்லாமல் தினம்கு ரைக்கிறார்.

மனமாட்சி உள்ளார்போல் தம்மை மதிக்கிறார்
இனமாட்சி உள்ளோமெனத் தம்மைத் துதிக்கிறார்.

வணக்கம் வணக்கமென்று வாயால் பதிக்கிறார்
இணக்க மறிந்து இணங்க எதிர்க்கிறார்.

சினத்தை மனதில் வைத்துச் சிரிக்கிறார்
கணக்கக் கதைத்துத் தம்மை வியக்கிறார்.

நனைந்து உலர்ந்த உடைஉ டுக்கிறார்
வினைப்பயன் என்று வீணாய்ப் பதைக்கிறார்.

நினைத்தனைப் போதும்மற வோமெனச் செபிக்கிறார்
மனத்துயர் வந்த போது தவிக்கிறார்,

## நடராஜரும் ஐந்தொழிலும்

உடுக்கு ஏந்தியகை — படைத்தல்
அபயகரம் — காத்தல்
தீ ஏந்திய கை — அழித்தல்
முயலகன் மீது ஊன்றிய கால் — மறைத்தல்
தூக்கிய திருவடி (குஞ்சிதபாதம்) — அருளல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media